**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **50**

| | | | |
|---|---|---|---|
| Name: | முகைதீன் பிச்சை | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

| |
|---|
| A2, A4, A6, A8, A11, A12, A15, A17,A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 25.04.2023**

<u>முதல் விசாரணை</u>:

நான் தென்காசி மாவட்டத்தில் ஹவுசிங்போர்டில் குடியிருந்து வருகிறேன். நான் கூலக்கடை பஜாரில் எப்.எம் சீட் கவர் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். கூலக்கடை பஜாரில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் வழக்கம் போல் கடையை திறக்க வரும்போது இரண்டு பிரிவினருக்கு இடையே தகராறு என சொன்னார்கள். குமார் பாண்டி வகையறாவுக்கும் வேறு சிலருக்கும் தகராறு என கேள்விப்பட்டேன். இரண்டு தரப்பிலும் கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன். இரண்டு பிரிவினர்கள் இஸ்லாமியர் என்றும் இந்துக்கள் என்றும் தெரியவந்தது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் காலை 8.30 மணிக்கு கடையை திறந்து

தொழில் செய்து வந்தபோது 10.15 மணிக்கு சப்தம் கேட்டதும் கடையை மூடிவிட்டு ஓடிவிட்டேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நடந்த சம்பவத்தில் இஸ்லாமியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே இரண்டு தரப்பிலும் கத்தி , அரிவாள், ஆகியவற்றால் ஒருவரை ஒருவர் வெட்டி தகராறு செய்தனர் என்று நான் கேள்விப்பட்டேன். அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் அவர்கள் கடையை சேதப்படுத்திவிடக்கூடாது என்று கடையை மூடினேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தலா 3 நபர்கள் இறந்துபோனார்கள் என்றும் சிலருக்கு காயம் ஏற்படடது என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளை தெரியும் காயம் பட்டவர்களை தெரியும் என்றும் எதிரிகள் இஸ்லாமியர் என்பதால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

-